

சென்னையில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டம் நேற்று நலக் குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முன்னேறிட முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையே தேவை என்று உணர்ந்து, கரூர் மாவட்ட கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைதுறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி முன்னிலையில், கரூர், மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி, கவுண்டன்புதூர் அ.தி.மு.க. கிளைக் கழக செயலாளர் குழந்தைவேல் தலைமையில், கணேசன், நாகராஜ், ரமேஷ், சவினாஷ், ஜோஸ்வா, கவியரசு, ரஞ்சித், லோகநாதன், காளிதாஸ், சத்தியராஜ், சபரீஸ்வரன், சுப்பிரமணி ஆகியோர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். ஒன்றிய கழக பொறுப்பாளர் முத்துக்குமாரசாமி மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### முன் வெளியீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்படுகிறது!

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் 16 தொகுதிகள் !

## ஆ.ராசா எம்.பி. – நூல் வெளியிட – கி.வீரமணி–தொல். திருமாவளவன் – சுப. வீரபாண்டியன் – தி.வேல்முருகன் சிறப்புரை!

சென்னை, டிச.24-

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தாக்கங்கள் முழுவதும் தொகுக்கப்பட்டு பதினாறு தொகுப்புகளாக வெளியிடப்படுகின்றன.

வருகிற 5.1.2025 அன்று சென்னை வண்டலூர் - கோவிலஞ்சேரி - வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (வி.ஐ.டி.) வளாகத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் - 16 தொகுதிகளாக வெளியிடப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. நூல்களை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகிறார்.

நூல்களை வி.ஐ.டி. துணைவேந்தர் கோ.விசுவநாதன் பெற்றுக்கொள்கிறார்.

மேலும் நூல்களை சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ஔவை ந.அருள், திரைப்படக் கலைஞர் பொன் வண்ணன், எஸ். பாலாஜி (எம்.எல்.ஏ. - வி.சி.க.), மல்லை சத்யா (ம.தி.மு.க.), முன்னாள் எம்.எல்.ஏ. வீ.தமிழ்மணி ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர்.

இதில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், ஊடகவியலாளர் ப.திருமாவேலன், ம.தி.மு.க. பொருளாளர் மு.செந்திலதிபன், சூலூர்- பாவேந்தர் பேரவை - செந்தலை ந.கவுதமன், வாலாசா வல்லவன், பேராசிரியர் த.செய ராமன், ப.மருதநாயகம், சு.குமணராஜா, ஆரூர் புதியவன் ஆகியோர் வாழ்த்தி சிறப்புரையாற்றுகின்றனர்.

மா.பூங்குன்றன், இறை. பொற்கொடி ஆகியோர் தலைமையில் தொடக்க உரைகளை கி.குணத்தொகையன், ப.அருளியார் மற்றும் தமிழக மக்கள் முன்னணி தோழர் பொழிலன் ஆகியோர் ஆற்றுகின்றனர்.

கோ.பாவேந்தன் ஒருங்கிணைப்புரையில், இ.அங்கயற்கண்ணி நன்றியுரை கூறுகிறார்.

பாவலரேறு பெருஞ்சித்தனாரின் எழுத்தடைவுகள் முன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகிறது.



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தையொட்டி ரத்ததான முகாம் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர். டி.எம்.செல்வகணபதி எம்.பி. தொடங்கி வைத்தார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முருகேசன் தலைமையில் முகாம் நடைபெற்றது. உடன் மாவட்ட நிர்வாகிகள் சம்பத்குமார், பொன்னுசாமி, ராமநாதன், நகர செயலாளர். காசிவிஸ்வநாதன், ஒன்றிய செயலாளர்கள் மிதுன் சக்ரவர்த்தி, சீனிவாச பெருமாள், அர்த்தநாரீஸ்வரன் ஆகியோர் இருந்தனர்.

### ஆதிதிராவிடர்களுக்கு எதிரான இயக்கம் பா.ஜ.க. என்பது தெளிவாகிறது!

# அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்துவதா ?

## அமித்ஷாவுக்கு – கழக ஆதிதிராவிடர் நலக்குழு கண்டனம்!

சென்னை, டிச.24-

“அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்திய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவுக்கு கழக ஆதிதிராவிடர் நலக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையில் சென்னை, சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் நடைபெற்றது.

தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் அவரச ஆலோசனை கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையில் துணைத்தலைவர் மா.மதிவேந்தன் மற்றும் இணைச் செயலாளர்கள் மருதூர் ராமலிங்கம், வி.பி.இராசன், செ.புஷ்பராஜ், திப்பம்பட்டி ஆறுசாமி ஆகியோர் முன்னிலையில் சென்னை, சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக ஆக்கப்பணிகள் மற்றும் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதுவருமாறு :-

இந்திய அரசியலமைப்பின் தந்தை அண்ணல் அம்பேத்கர் அவர்களை நாடாளுமன்றத்தில் இழிவுபடுத்தி பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு கண்டிக்கத்தக்கது. மேலும் பா.ஜ.க.வின் அரசியல் நோக்கம் ஆதிதிராவிடர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கும் எதிரான இயக்கம் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. இச்செயலை ஆதிதிராவிடர் நலக்குழு மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவுபடுத்தி பேசிய பாஜகவின் விஷப்பேச்சுக்கு எதிராக அண்ணல் அம்பேத்கரின் புகழ் பாதுகாக்க இந்தியாவில் முதன் முதலில் போராட்டத்தை அறிவித்த கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் நன்றியும், பாராட்டுதலையும் தெரிவிக்கிறது.

நேற்று முன்தினம் (22.12.2024) நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் உரையில் வைத்த வேண்டுகோளுக்கு ஏற்ப 2026ஆம் சட்டமன்றத் தேர்தலில் ஆதிதிராவிடர் மக்களின் வாக்குகளை திமுக பெற கடுமையாகப் பணியாற்றிட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர்கள் ச.தசரதன், பி.துரைசாமி, மு.பொன்தோஷ், பரமானந்தம், மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டனர்.


# ஆழ்ந்த இரங்கல்



புதுக்கோட்டை
தி.மு.க மாநகர செயலாளர்

## ஆ.செந்தில்
அவர்கள்

நேற்று (23.12.2024 – திங்கட்கிழமை) இயற்கை எய்தினார். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

...ஆழ்ந்த வருத்தத்துடன்...

மாண்புமிகு. எஸ்.ரகுபதி B.Sc.,B.L., சட்டத்துறை அமைச்சர், மாவட்ட கழகச் செயலாளர்

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க